சிந்தனை
தொகுதி V
இதழ் III, 1993

# சுயாதீனசித்தமும் சைவசித்தாந்தமும்

நா. ஞானகுமாரன்

உலகளாவிய மனிதப் பண்பினை உயிர்ப்பாகக் கொண்டு விளங்கும் பெருஞ் சமயங்களுள் ஒன்றாகச் சைவம் விளங்குகின்றது. 'மேன்மை கொள் சைவநீதி விளங்குக உலகம் எல்லாம்' எனும் கூற்றுக்கமைய, சைவநெறியானது பல நாடுகளிலும், பல்வேறு மக்களாலும் ஏற்றிப் போற்றி வளர்ந்து வருவதனைக் காணக்கூடியதாக வுள்ளது. சிவனை முழுமுதற் கடவுளாகக் கொண்டுள்ள இச் சைவ சமயம் இலங்கை, இந்தியா, நேபாளம், சிங்கப்பூர், அமெரிக்கா, இங்கிலாந்து போன்ற பல நாடுகளிலும் கடைபிடிக்கப்படுதலைக் காணலாம். இவ்வாறு ஒவ்வொரு சமயமும் பெருகி வளர்ந்து வரும் நிலைக்கு ஒருசில காரணங்களினை நாம் இனங்காணக்கூடியதாக உள்ளது. சைவத்தின் வளர்ச்சி நிலைக்கு அது தன்னகத்தே கொண்டுள்ள சுயாதீனசித்தக் கருத்தும் முக்கியமான தொன்றாகும்.

இந்திய தத்துவத்தில் ஒவ்வொரு தத்துவங்களும் மதங்களாக, சமயங்களாக மிளிர்ந்து வந்துள்ளமை நோக்குதற்குரிய தொன்றாகும். இத் தத்துவங்கள் வெறுமனே சிந்தனைக் கோலங்கள் என்றவகையில் தனித்து நிற்காது சமயங்களின் ஆதார மூலங்களாகத் திகழ்ந்துள்ளமை அவற்றின் சிறப்பு அம்சங்களாகச் சுட்டத்தக்கனவாகும். சாங்கியம், யோகம், நியாயம், வைசேடிகம், வேதாந்தம், மீமாஞ்சை, உலகாயதம், சமணம், பௌத்தம் போன்றவ தத்துவங்களாக எடுத்தாளப்பட்ட அதேவேளை மதங்களாகவும் எடுத்தாளப்பட்டன.

இந்திய மதங்கள் ஒவ்வொன்றும் மனித வாழ்வினை மேம்படுத்தலையே நோக்காக, அடிப்படையாகக் கொண்டு திகழ்கின்றன. இவ்வகையில் சமயங்கள் ''வாழ்வாங்கு வாழ'' வழிகாட்டும் வாழ்க்கை நெறியாக, மார்க்கமாக அமைந்தன. வாழ்க்கையினை எவ்வாறு மேம்படுத்தி உயர்ந்த உன்னத நிலையை அடையலாம் என்பதனை மனிதனின் சமூக, உளநிலைப்பாடுகளுக்கு இயைய வழிப்படுத்தும் நெறிகளாக இச் சமயங்கள் திகழ்கின்றன. இவ்வாறு வழி நடாத்தும் நடைமுறை நெறிக்குரிய ஆதாரச் சிந்தனைகளையும், அடிப்படை உண்மைகளையும் தத்துவங்கள் எடுத்து விளக்குவனவாக அமைந்தன. இவ்வகையில் தத்துவமும், சமயமும் ஒன்றினை ஒன்று பரஸ்பரம் வேண்டி வளர்ந்துள்ளமை இந்திய தத்துவப் பரப்பில் காணக்கூடியதாகவுள்ளது. இந்நிலைக்கு சைவமும் வேறுபடாது தத்துவமும், சமயமும் ஒன்றுக்கொன்று இணைவுடையதாய் விளங்குகின்றது. இச் சித்தாந்த உண்மையினை மெய்கண்ட தேவரின் சிவஞானபோதம் முதலாக அமைந்த மெய்கண்ட சாஸ்திரங்கள் தெளிவுற விளக்கி நிற்கின்றன.

சைவ சித்தாந்தத்தில் சுயாதீன சித்தம் பெறும் நிலைப்பாட்டினை அறிவதற்கு முன் சுயாதீன சித்தம் என்றால் என்ன என நோக்குவது பயனுடையதாகும். சுயாதீன சித்தம் எனில் சுயவிருப்பிற்கு அமைய நடத்தல் என வரையறுக்கலாம். நாம் சுயாதீன

சித்தம் உடையவர்கள் எனும்போது, சுயமாக எமது சித்தத்திற்கு அமைய செயற்படுகிறவர்கள் எனப்பொருள் கொள்ளலாம். நிலவுலகில் பிறந்த மானிடர்கள் அனைவரும் கர்மம் ஆற்றுபவர்களாக அதாவது வினை புரிபவர்களாக விளங்குகின்றனர். மானிடர்கள் வினையின்றி, செயலின்றி இருத்தலரிது. சிந்திப்பதும், நடப்பதும், எழுதுவதும், படிப்பதும், சும்மா இருக்கின்றோம் என நினைப்பதும் போன்றவனைத்தும் வினைகளாகவே அமையும். இதனால்தான் 'சும்மா இரு' எனும் வாக்குக் கூடப் பொருள் பொதிந்த பல உண்மைகளை எமக்கு உணர்த்த வல்லதாக உள்ளது. மானிடர்கள் வினையை ஆற்றுகின்றார்கள். இவ்வாறு வினையை ஆற்றுகின்றவிடத்து அவ்வினைக்கு அவர்கள் பொறுப்பானவர்களா எனும் வினா முதன்மையாகப் பல சிந்தனையாளர்களால் எழுப்பப்பட்டு ஆராயப்பட்டுள்ளமையைக் காணலாம். நாம் ஆற்றுகின்ற அனைத்துச் செயல்களும் முன்கூட்டியே நிர்ணயிக்கப்பட்டுள்ளன எனக் கூறும் நிர்ணயவாதிகளும், இறைவனின் அதி உயர்நிலையினை ஏற்று அனைத்துச் செயல்களும் அவனது தன்னாதிக்க விருப்பினால் நிர்ணயிக்கப்படுகின்றதெனக் கருதும் முன்னியதி வாதிகளும், அனைத்துச் செயல்களும் ஏலவே விதிக்கப்பட்டதற்கு அமையவே நடைபெறும் எனக் கூறும் விதிவாதிகளும், நாம் ஆற்றுகின்ற செயல்களுக்கு நாம் பொறுப்பானவர்கள் அல்லர் எனக் கூறுபவர்களாக விளங்குகின்றனர். மேற்சுட்டியோர் கருத்தினை மறுப்பவர்களாகச் சுயாதீனசித்தவாதத்தினை ஏற்பவர்கள் விளங்குகின்றனர். நாம் ஆற்றுகின்ற செயல்களுக்கு எல்லாம் நாம் பொறுப்பானவர்களோ எனும் கேள்வி இதர பல துறைகளிலும் எழுப்பப்படுவது போலச் சமயத்திலும் முதன்மை பெறுவதைக் காணலாம். தாம் ஆற்றுகின்ற வினைகளுக்கு அவர்கள் பொறுப்பற்றவர்களாயின் அவர்கள் வினையாற்றினார்கள் என்பது பொருத்தமானதோ எனும் ஆசங்கை எழுதுவதும் தவிர்க்க முடியாததே. நான் ஆற்றியதாகக் கருதும் வினைக்கு நான் பொறுப்புடையவன் அல்லேன் எனின் அவ்வினையின் விளைவுகளுக்கு நான் எவ்விதம் பொறுப்புடையவன் ஆவேன் எனும் கேள்வி எழுவது நியாயமானதாகவே உள்ளது. மேலும் என் செயல்களுக்கு நான் பொறுப்பற்றவன் ஆவே:னெனில் அங்கு 'என்செயல்' என்று சொல்வது கூடப் பொருத்தமானதோ எனும் கேள்வியும் நியாயமானதாகத் தோன்றுகின்றது.

இத் தொடர்பில் சைவசித்தாந்தமானது நாம் ஆற்றுகின்ற செயலை 'எம் செயலாகவே' இனங்காணும் வகையில் கர்மக் கோட்பாட்டினை முன்வைத்திருப்பது மேற்கூறிய சந்தேகங்களுக்கு விடை பகருவதாகின்றது. சிததாந்தத்தின் கர்மக் கோட்பாடானது ஒவ்வொருவரும் வினையாற்றுகின்றான் என்பதனை ஏற்றுநிற்கின்றது. அவ்வாறு ஆற்றுகின்ற வினையின் தன்மைக்கு ஏற்ப கர்மபலனைப் பெற்றுக் கொள்ளுகின்றான் எனச் சுட்டி நிற்கின்றது. ஆற்றிய வினைக்குரிய விளைவினை அவனே பெறுகின்றான் என்பதிலிருந்து ஆற்றிய செயல்களுக்கு அவனே பொறுப்பானவன் என்பது வெள்ளிடைமலையாகின்றது. இவ்விடத்தே 'தினை விதைத்தவன் தினையறுப்பான்; வினை விதைத்தவன் வினை அறுப்பான்' என்று சுட்டும் கூற்றும் மேற்போந்த நிலையினை இலகுவில் உணர்த்தி நிற்கின்றது. இவ் வகையில் நாம் ஆற்றுகின்ற வினைகளும், அவ்வினைகளுக்குரிய விளைவும் கர்மக் கோட்பாட்டினால் விளக்கி நிற்கப்படுவது சைவசித்தாந்தத்தில் நயக்கத்தக்க கருத்தாகிறது.

சைவசித்தாந்தக் கர்மக் கோட்பாட்டின் வழி நாம் ஆற்றுகின்ற செயல்களுக்கு நாமே நாயகனாய் பொறுப்பாளியாய் அமைகின்றமை எடுத்தாளப்படுவது ஒருபுறமிருக்க நாம் செயல்களைச் செய்வதற்குரிய தேர்வுச் சுதந்திரமும் கொண்டிருத்தல் காணற்குரியதாகும். இத் தேர்வுச் சுதந்திரத்தின் சான்றுகளான ஆச்சிரம தர்மமும், நான்கு பாதமும், நான்கு மார்க்கமும் சைவத்தில் எடுத்தோதப்படுவதைக் காணலாம். இவை ஒவ்வொருவரும் தாம் விரும்

பிய நெறியினைக் கடைப்பிடித்து உயர்வதற்குரிய வழிமுறையாக அமைந்திருக்கின்றன. மனித உளப்பாங்கிற்கு இசைந்த வகையில் அவனது சமூக, குடும்ப நிலைகளுக்கு ஏற்றநிலையில் தெரிவுச் சுதந்திரத்தினை வழங்குவதாக அமைந்திருப்பது சித்தாந்தத்தில் சுயாதீன சித்தம் பெறும் இடத்தினை வெளிக் காண்பிப்பதாக அமைகின்றது.

கர்மக் கோட்பாட்டின் வழி ஒவ்வொருவரும் ஆற்றுகின்ற செயலுக்குப் பொறுப்பேற்றுச் செயல்களினைத் தத்தம் சித்தத்திற்கமைய சுயாதீனமாகத் தெரிவு செய்பவனாக விளங்குகின்றான் என்பதனைப் பெறுகின்றோம். அதேவேளை விதிபற்றிய கருத்துக்கள் சுயாதீன சித்தம் பற்றிய கருத்தோடு வேறுபட்டு அமைகின்றன. விதி என்பது ஏலவே விதிக்கப்பட்டது எனப் பொருள் கொள்ளக்கூடியதாகும். இங்கு செயலை ஆற்றுபவன் தனது சித்தத்திற்கு அமையச் செயலை ஆற்றுவதாகக் கொள்ளச் சாத்தியமில்லை. அவனுக்கு அப்பாற்பட்ட சில காரணிகள் அச் செயலுக்குக் காரணமாக அமைந்து விடுகின்றன. இதனால் அவன் ஆற்றுகின்றதாகக் கருதப்படும் செயல் உண்மையில் அவனால் செய்யப்படவில்லை என்றும், விதிக்கப்பட்ட விதி வழியே அமைகின்றதென்றும் எடுத்தாளுவர். மேலும் 'எது நடக்க வேண்டுமோ அது தான் நடக்கும்' எனவும் 'இவ்வாறு நடக்க வேண்டும் என்று எழுதப்பட்டிருந்தால் அல்லது விதிக்கப்பட்டிருந்தால் யார் என்ன செய்ய முடியும்' எனவும் 'தாரமும் குருவும் தலை விதிப்படியே' எனவும் எடுத்தாளப் படுகின்ற கூற்றுக்கள் விதியின் செல்வாக்கினைப் பறைசாற்றுவதாகச் சுட்டுவர்.

விதி, ஊழ், நியதி, பால், முறை, உண்மை, தெய்வம் என்பன ஒரு பொருள் கிளவியாகப் பரிமேலழகர் சுட்டுவார்.[1] இதில் விதி, ஊழ், நியதி என்பன ஒரே பொருள் சுட்டும் நிலையில் பெரு வழக்காயுள்ளது. ''ஊழின் பெருவலி யா உள''[2] என ஊழின் வலிமையினை எடுத்துக்காட்டிய வள்ளுவரும் பிற்பட 'ஊழையும் உப்பக்கம் காண்பர்'[3] எனச் சுட்டும் முகத்தால் முயற்சி திருவினை ஆக்கும்.[4] அல்லது முயற்சி தன் மெய்வருந்தக் கூலி தரும்[5] எனும் நிலைக்கு இட்டுச் செல்ல வல்லதென்பதனைத் தெளிவாக்குகின்றார். 'பாவம் என்பது நீ செய்யும் தீமை': 'புண்ணியம் என்பது நீ செய்யும் நன்மை'; 'முற்பகல் செய்யின் பிற்பகல் விளையும்' என்பவையெல்லாம் சைவப் பெருமக்கள் ஏற்று நிற்கின்ற பழமொழிகளாகும். இதன்வழி எமது செயல்களே எமக்கு வரவிருக்கின்ற பலன்களினை நிர்ணயிப்பதாக அமைதல் கண்கூடு. இதனையே வள்ளுவரும்,

> 'தம்பொருள் என்பதம் மக்கள் அவர் பொருள்
> தத்தம் வினையால் வரும்'[6]

எனச் சுட்டுகின்றார். எனவே செயல்கள் அனைத்தும் விதிக்கப்பட்ட வகையிலேயே நடைபெறும் எனக் கூறமுடியாது. எமது கர்ம வினைகளுக்கு ஏற்ப நல்வினை, தீவினையினைப் பெறுவது விதிக்கப்பட்டதெனலாம். ஆனால் விதி எனக் கூறுவது எமது சுயாதீன சித்தமான நடத்தைகளுக்கு முற்றும் முரணானதாக அமையும் எனக் கொள்வது சித்தாந்தத்தில் பொருத்தமற்றதாகும். இக்கருத்தினை ஏற்கும் வகையிலேயே 'விதியையும் மதியால் வெல்லலாம்' எனவும் 'முயற்சி உடையார் இகழ்ச்சி அடையார்' எனவும் எடுத்தாளப்படும் வாக்குகளைக் காணலாம். இச் சாயலைப் பிரதிபலிக்கும் வகையிலேயே அருணந்தி சிவாசாரியரும் 'இம்மையின் முயற்சியாலே யிருநிதி யீட்டி யின்பம் இம்மையே நுகர்வர்'[7] என அழகுறக் குறிப்பிடுதல் காணலாம்.

சித்தாந்தத்தில் வருகின்ற விதி பற்றிய கருத்தானது பொது வழக்கில் பயன்படுத்தப்படும் விதி பற்றிய விளக்கத்தோடு வேறுபட்டு அமைகின்றது. விதிதான் மனிதனின் செயல்களை நிர்ணயிக்கின்றது எனச் சுயாதீன சித்தத்தினை மறுத்து வாதிக்கும் நிர்ணய வாதிகள் கருத்துப் போல ஏற்றுக்

கொள்ளுதல் சித்தாந்தத்தில் பொருத்த மற்றதாகும். நிர்ணய வாதிகள் அனைத்துச் செயல்களும் முற்கூட்டியே நிர்ணயிக்சப்பட்டதற்கமையவே அமைவுறும் என்பதனை விளக்கி நிற்பவர்களாவர். இவர்களில் ஒழுக்க நிர்ணய வாதிகள், இறையியல் நிர்ணய வாதிகள், உடலியல் நிர்ணய வாதிகள், உளவியல் நிர்ணயவாதிகள் என நான்கு வகையினரை இனங்காணலாம். இவர்களனைவரும் சுயமாகச் செயலாற்றும் தன்மையினை நிராகரித்து நிற்பதில் ஒன்றுபட்டு நிற்கின்றனர். ஆனால் சைவசித்தாந்தத்தில் விதி என்பது எமது செயல்களில் சுயாதீன சித்த நிலையினை முழுமையாக நிராகரித்து விளக்கி நிற்பதாக மாட்டாது.

விதிப்படி[8], விதியநுபவத்தால்[9], அரன் விதி[10], எனச் சித்தியாரில் அமையும் சொற்பயன்பாடானது விதி பற்றிய கருத்தினைத் தெளிவாக உணர வழி வகுக்கின்றது. இங்கு விதி என்பது செயல் நிலையைச் கட்டி நிற்கின்றது.

'அரன் விதி யருள்தென்றே யறைந்தனம்
அதுவு முன்னே
தரைநர கருத்து றக்கந்தனுகர ணாதி
யெல்லாம்
வருவதுஞ் செய்த நாதி மலங்களிம்
மருந்தாற் நீர்த்துப்
பரகதி யதுவுந் தந்து பாதபங்கயமுஞ்
சூட்டும'[11]

எனும் பாடலில் அரன் விதியானது ஆன்மாக்களின் உயர்வுக்காக இறைவனால் வழங்கி நிற்கின்ற தன்மைகளைப் புலப்படுத்துகின்றது. நுட்பமாக நோக்கின் இறைவனின் செயல்கள் விதிகளாக எடுத்தாளப் பட்டுள்ளமை தெளிவாகின்றது.

'பெருமைக்கும் ஏனைச் சிறுமைக்கும்
தத்தம்
கருமமே கட்டளைக் கல்'[12]

என வள்ளுவப் பெருந்தகை சுட்டுவது போல நாம் செய்கின்ற வினைகளே நல்வினை, தீவினையாய் நாம் அடையும் நிலைகளுக்குக் காரணமாயிருக்கின்றது. 'ஏறிடு முன்பு செய்த கன்மமிங்கிவற்றிற்கேது'[13] என அருணந்தி சிவாசாரியர் சுட்டுவதும் இக் கருத்தினையே உறுதி செய்கிறது. நாம் ஆற்றுகின்ற வினைகளுக்கு ஏற்ற விளைவினைப் பெறுகின்றோம் என்பது விதிக்கப் பட்ட விதியாகும் என்பது இவ்விடத்தே பொருத்தமானதாகும்.

''... .. நிட்டுர மின்னார்
குழலுக் கிசைந்த வகை மாலை
கொண்டு குற்றேவல் செய்து
எழலுக்கு முத்துலையிட்டி றைதே
னென்விதிவசமே''[14]

எனப் பட்டினத்தார் எடுத்தாள்வதன் வழி தீய செயல்கள் மூலம் தீவினை பெறுதல் விதியாவது புலப்படுகின்றது. மேலும் முத்திதனை அடைந்தோர் .. விரவுவர் என்று ஓதும் விதி'[15] எனவும் 'விதிப்படி'[16] எனவும் மனவாசகங் கடந்தார் கூறுவதும் 'விதியால் விளைத்திட்டு'[17] என அருணந்தி சிவாசாரியர் கூறுவதும் விதியினை விதிக்கப்பட்ட நெறியாகச் சுட்டுவதாகின்றது. இக் கருத்துக்கு அரண் செய்வது போலவே அருணந்தி சிவாசாரியரும்,

'பேறிழவின்பமோடு பிணி மூப்புச்
சாக்கா டென்னும்
ஆறு முன் கருவுட் பட்டதவ் விதி
யநுபவத்தால்...''[19]

எனச் சுட்டுதல் காணலாம். இச் சாயலின் பின்னணியில் தான் குலசேகர ஆழ்வார் கூட,

''வானாளும் செல்வமும் மண்ணரசும்
யான் வேண்டேன்
தேனார் பூஞ்சோலைத் திருவேங்கடச்
சுனையில்
மீனாய்ப் பிறக்கும் விதியுடை யேனா
வேனே''[18]

என மீனாய்ப் பிறக்க வேண்டும் விதி கேட்கின்ற தரத்தினைக் காணக்கூடியதாகவுள்ளது.

கர்மக் கோட்பாட்டிற்கமைய மேற் கண்டவாறு விதி பற்றிய கருத்துக்களைப் பெறுவது ஒரு புறமமைய, ஒரு செயலுக் குரிய காரணங்கள் எமது சிந்தைக்கு அப் பாற்பட்ட நிலைக்குரியதாகின்ற வேளை நாம் அதனை விதி என அழைத்துக் கொள்ளவில்லையா? என்பதும் சிந்திக்கத் தூண்டுவதாகின்றது. அரிச்சந்திரன் மயா னம் காத்தது விதியானதும், கோவலன் மாண்டமுறை விதியானதும், இராமன் காடு ஏகியது விதியானதும் இச் சாயலினையே பிரதிபலிப்பது போலத் தோன்றுகின்றன. ஒருவரின் எதிர்பாராத இறப்புக்கூட அது அவரின் விதி என எடுத்தாள வைக்கின்றது.

'வாள் ஆரும் கண்ணியர் மோகம்-யம
வாதைக் கனலை வளர்க்கும் மெய்
என்றே
வேளான் அவனும் மெய் விட்டான் -
என்னில்
மிக்கோர் துறக்கை விதி என்றோ
தோழி'[20]

எனத் தாயுமானவர் எடுத்துக் காட்டுவதும் இந்நிலையினையேயாகும். தெளிவாக நியா யம் புரியாத, புலப்படாத நிலைகளில் விதி யின் துணையினை நாடுவது போல் அமை கின்றது. பாரதிகூட பாஞ்சாலி சபதத்தில் திருதராட்டிரன் வாயிலாக,

'விதி விதி அட மகனே வேறு எது
சொல்லுவேன்
கதி யுறும் கால மன்றோ கயமகன்
எனைச் சார்த்திட்டான்'[21]

எனக் கூறும் நிலை விளக்கமுடியாத நிலை யில் விதியினைத் துணைக்கு அழைப்பது போல் தோன்றுகின்றது. இக்கருத்திற்கு உரமளிப்பதுபோல் ஔவையார் கூறும் பாடல் பொருள் பொதிந்ததாகவுள்ளது.

'சிவாய நமவென்று சிந்தித் திருப்போர்க்
கபாய மொருநாளு மில்லை - உபாயம்
இதுவே மதியாகு மல்லாத வெல்லாம்
விதியே மதியாய் விடும்'[22]

என்பதன் வழி உபாயம் கூறும் மூதாட்டி அதனையே மதியாகக் காட்டி விட்டு, அவ் வாறு அறிவிற்கு அப்பாற்பட்ட, அல்லாத தினை எல்லாம் விதியாகச் சுட்டுகின்றமை தெளிவாகும். விளக்கம் அளிக்க முடியாத நிலையில் இவற்றை விதி என எடுத்தாளப் பட்டாலும் சுயாதீன சித்தமற்ற செயலா கக் கொள்ள முடியாத நிலையைச் சித்தாந் தத்தில் நோக்கலாம். விதிக்கப்பட்ட பதி னாறு ஆண்டு வாழ்வினைத் தன் வினையி னால் என்றென்றும் பதினாறு வயது வாழ் வாக மாற்றிய தன்மையினை மார்க்கண் டேய புராணம் எடுத்தியம்புகின்றது. மதிக் கும் விதிக்கும் இடையிலான உறவினை

'விதியை யும்விதித்து என்னை விதித்
திட்ட
மதியை யும்விதித்து அம்மதி மாயை
யில்
பதிய வைத்த பசுபதி நின் அருள்

கதியை எப்படிக் கண்டு களிப்பது'[23]

எனத் தாயுமானவர் எடுத்துரைப்பது நயக் கத்தக்கதாகும். இவ்வகையில் வினையின் வலிமையானது விதியின் வலிமையினை விடக் குறைந்ததல்ல எனக் காட்டி நிற் கின்ற அநுபவங்கள் சுயாதீன சித்த நிலைப் பாட்டிற்கு உரமளிப்பதாய் அமைகின்றன.

வினைக்குரிய விளைவினை, கர்மவிதி விதிக்கப்பட்டதாக எடுத்தாள்வது போல விதி ஒரு நெறியாகவும் எடுத்தாளப்படுதல் சாத்தியமாகும்.

''காண்பவன் சிவனே யானா லவனடிக்
கன்பு செய்கை
மான்பற மரன்றன் பாத மறந்து
செய்யறங்களெல்லாம்
வீண் செயலிறைவன் சொன்ன விதி
யறம்...''[24]

என அருணந்தி சிவாசாரியர் சுட்டுகின் றமை விதியினை ஒரு நெறி முறையாக உணர்த்தி நிற்க வல்லதாகின்றது. சீகாழிச் சிற்றம்பல நாடிகளும் 'விதி வழியை'[25] ஒரு

நெறியாகக் குறிப்பிடும் பாங்கு நோக்கத் தக்கதாகும். இறைவன் காட்டுகின்ற நெறியாக, முறைமையாக விதி அமைவுறுகையில் அவ்விதியினை அடைதல் உயர்ந்ததாகின்றது.

''வாழ்வெனு மையல்விட்டு வறுமை
யாஞ்சி றுமை தப்பித்
தாழ்வெனுந் தன்மை யோடுஞ் சைவ
மாஞ் சமயம் சாரும்
ஊழ் பெறலரிது...''[26]

எனச் சித்தியார் அழகுறச் சுட்டுவதும் மேற்போந்த கருத்துண்மையின் அடிப்படையில் என்பது தெளிவாகும். இவ்வகையில் அற்புதத் திருவந்தாதியில் காரைக்காலம்மையார்.

''அருளே உலகெலாம் ஆய்விப்பது –
ஈசன்
அருளே பிறப்பறுப்பது ஆனால் –
அருளாலே
மெய்ப்பொருளை நோக்கும் விதியுடை
யேன்...''[27]

எனக் குறிப்பிடும் கருத்தும் மேற்சுட்டிய கருத்துடன் ஒப்புநோக்கி நயக்கத்தக்கதாகின்றது. விதிக்கப்பட்ட நெறியையே பிரமாபமாக இனங்கண்ட வகையில் ''விதி உண்டோ...''[28] எனவும் 'விதி பலவும் வேண்டாவே'[29] எனவும் சீகாழிச் சிற்றம்பலநாடிகள் எடுத்தாளும் தன்மை இந்நிலைக்குச் சிகரம் வைத்தது போல் அமைகின்றதென்றால் தவறாகாது.

சைவசித்தாந்தந்தின் வழி நாம் இறைவனுக்கு உடமைப் பொருளாக விளங்குகின்றோம் என்பதனை மெய்கண்டரின் 'தம்மை உணர்ந்து தமை உடைய' தன்னை உணரும் முறைவழி தெளிய வருகின்றோம்.[30] இங்கு இறைவனின் உடைமைப் பொருளாய் நாம் இருப்பதும், எமக்கு உடைமைப் பொருளாய் வினைகள் அமைவதும் உய்த்துணரற்பாலதாகும். எம்மை நாம் உணர்வதும், எம்மை உடைமைப் பொருளாக உணர்வதும் எமது சித்தத்திற்குரிய தொன்றென்பது புலப்படும். இதனால்தான் தம்மை உணராதவர் நிலையும் மெய்கண்டரால் விளக்கி நிற்கப்படுதல் காணலாம். இங்கு தம்மை உணர்தல் சுயாதீன சித்த நிலையினை முழுமையாகத் தெளிவுபடுத்துவதாயும், தம்மையுடைய தன்னை உணர்தல் விதி நிலைக்குரியதாயும் எடுத்துணர்தல் சித்தாந்தம் காட்டும் சுயாதீன சித்தாந்த நிலையைத் தெளிவுற அறிதற்குரியதாகின்றது. தம்மை உணர்ந்து, அவ்வுணர்வினின்று உணர, வைத்த உடைமைப் பொருளையும் உணர்ந்து உணர்வின் பெருமையினை உணர்த்துகின்ற சிறப்பினைச் சித்தாந்திகளின் வாக்குகளினூடாக நாமுணரலாம். சுயாதீன சித்தத்துடன் செயலாற்றுகின்றோம் எனும் போது அச்செயலின் பலன் எம்மைத் தொடர்ந்து வருதல் கர்மவிதியாகின்றது. இவ்வொழுங்கு நிலையில் சுயாதீனசித்தக் கருத்தும், சுதந்திரமும் சித்தாந்தத்தில் சிறப்பிடம் பெறுகின்றன. இதன் வெளிப்பாடாக 'என்னை நன்றாக இறைவன் படைத்தனன்'[31] எனச் செப்பும் அனுபவ நிலை பெறப்படுகின்றமையைக் காணலாம்.

வாழ்க்கையில் உன்னத நிலையை அடைதலே ஒவ்வொருவரினதும் இலக்காக இருக்கின்றது. சித்தாந்தம் வாழ்க்கையின் உயர்ந்த நிலையாக இறைவனுடன் இரண்டறக் கலக்கின்ற மோட்ச நிலையை, விடுதலையைச் சுட்டி நிற்கின்றது. நாம் பந்தம், கட்டு, மலம் என்பவற்றுடன் பிரிக்கமுடியாதவர்களாய் அல்லலுறுகின்றோம். இவற்றினின்று எமை விடுவித்துக் கொள்ளுதலே விடுதலை அல்லது சுதந்திரம் ஆகின்றது.

'வித்திடும் பொருள் காமமாதிகள்
வேண்டிடும்பொருள்
ஈண்டருள் முடித்து மும்மலம்விட்டு
நின் மலரோடு நின்றிடல் முத்தியே'[32]

என அருணந்தி சிவாசாரியர் குறிப்பிடுதல் இக் கருத்தினைத் தெளிவுபடுத்தி நிற்கின்றது. இதுவே பேரின்பநிலையாகவும், துன்பம் துளியுமில்லா நிலையாகவும் சித்தாந்தத்தில் சித்திரிக்கப்படுகின்றது.

நாம் சுயாதீன சித்தமுடையவர்களாக இருப்பதனால் சுதந்திர நிலைக்கு நாமே வழிதேட வேண்டியவர்களாக அமைகின்றோம். இறைவனுக்குப்பணியாதமையினால் பாவிகளானார்கள் எனக் கிறிஸ்தவம் சுட்டுவது போல் சித்தாந்தமும் ஆணவ மல வாசத்தினால் பந்திக்கப்பட்டவர்களாக ஆன்மாக்கள் விளங்குதலைக் கூறும். மலங்களின் பிணைப்பிற்குட்பட்டிருக்கும் ஆன்மாக்கள் தன்னறிவும், சிவனறிவும் மழுங்கப்பட்டிருப்பதனால் மலநீக்கவழி, விடுதலையடைய முயல்கின்றன. 'தீதும் நன்றும் பிறர்தர வாரா'[33] என்பதற்கமைய நாமே நம் விளைவுகளின் வழி நன்மை தீமையினை தேடவேண்டியவர்களாவோம். இதற்குச் சித்தாந்தம் காட்டும் கர்ம, மறு பிறப்புக் கோட்பாடுகள் உதவுகின்றன. இங்கு எமது வினைத்திறன் பல பிறப்புக்களிலும் தொடர்ந்து எம்மை உய்விக்கவோ உழலவோ வைக்கின்றது. என் கடன் பணி செய்து கிடப்பதே'[34] என இறைபணியைத் தம் வினையாகக் கொண்டு விடுதலை நாடும் தன்மையினையும் காணலாம். எமது விருப்பிற்கு அமைய விரும்பிய மார்க்கங்களினைத் தேர்ந்து விடுதலைக்கு வழி காணச் சித்தாந்தம் வழிகாட்டுகின்றது. சித்தாந்தம் காட்டி நிற்கின்ற கர்ம மார்க்கம், யோக மார்க்கம், பக்தி மார்க்கம், ஞான மார்க்கம் போன்றன சுயாதீன சித்த தெரிவு நிலைத் தன்மைக்கு உரமிட்டு வளம்படுத்துவது போல் விளங்குகின்றன.

சுதந்திரம் அல்லது விடுதலை என்பதே சித்தாந்தத்தின் இறுதி இலக்காக அமைகின்ற வேளையிலும் அந்நெறியில் திகழ்ந்தவர்கள் சுதந்திரத்திற்கு எதிரான கருத்தினை நாடினார்களோ எனும் சந்தேகம் அவர்களது கூற்றுக்கள் சிலவற்றினை நோக்கும்போது புலப்படும். விடுதலை எனபது ஏலவே கூறியது போல பற்று, பாசங்களினின்று விடுபடுவதாக அமைகின்றது. அதேவேளை இறைவனது பற்றுக்களினின்று விடுபட விரும்பாதவர்களாக, அவனுக்கு அடிமையாக வாழ விழைவு கொண்டவர்களாக இருந்த தன்மை காணலாம். பற்றை விடுவதற்குப் பற்றற்றான் பற்றினை பற்றுகின்ற பாங்கில் 'அடியார்க்கும அடியவனாய்' மீளா அடிமை கொண்டவர்களாய் சைவ நாயன்மார்கள் விளங்கியமை காணலாம். 'ஒருமையே அல்லேன் எழுமையும் அடியேன்', 'அடியவர்க்கடியனும் ஆனேன்' எனச் சுட்டும் அனுபவங்கள் அடிமைத்தனத்தில் விடுதலையின் உண்மைப் பரிணாமத்தினைக் காட்டுவதாகின்றது. ''நாமார்க்கும் குடியல்லோம் நமனை அஞ்சோம் என்றும் ''பிணியெல்லாம் வரினும் அஞ்சேன் பிறப்பினோடிறப்பும் அஞ்சேன்'' என்றும் வைராக்கியம் கொண்ட நாயன்மார்கள் இறைவனைச் சிக்கெனப் பிடித்து விடுபட விரும்பாத அடிமைகளாக வாழ நினைத்தமை சிந்தைக்குரியதாகும். இதுவும் சித்தாந்தத்தில் அமையும் சுயாதீன சித்தத்தின் விரிந்த பரப்பினை வெளிக் காண்பிக்கின்றதெனில் தவறாகாது. □

---

## அடிக்குறிப்புக்கள்

1. விதி என்பது சட்டம் தீர்ப்பு, கட்டளை, கடமை, ஒழுக்கமுறை, பிரமன், இயல்பு, உண்மை, அறிவு போன்ற பல பொருள் குறிக்கும் சொல்லாகத் தமிழ் அகராதி சுட்டுகிறது.

   *தமிழ் அகராதி*, Vol. VI, Part III, சென்னைப் பல்கலைக்கழகம், சென்னை, ப. 3672.

2. ''ஊழின் பெருவலி யாவுள மற்றுஒன்று
சூழினும் தான் முந்துறும்'',
திருக்குறள், 380.

3. ''ஊழையும் உப்பக்கம் காண்பர் உலைவு இன்றித்
தாழாது உஞற்றுபவர்''
திருக்குறள், 620.

4. மேற்படி, 616 ஆம் குறள்.

5. மேற்படி, 619 ஆம் குறள்.

6. மேற்படி, 63 ஆம் குறள்.

7. சிவஞானசித்தியார் சுபக்கம், 97 ஆம் பாடல்.

8. ''விதிப்படி சூக்குமத்தே யுருவரும் வினையள விங்கே
உதித்திடா வுருவ மாக வுடுவரு மரங்கள் வித்திற்
சுதித்தெழும்...''

சிவஞானசித்தியார், சுபக்கம், 139 ஆம் பாடல்.

9. மேற்படி, 99 ஆம் பாடல்.

10. மேற்படி, 141 ஆம் பாடல்.

11. மேற்படி,

12. திருக்குறள் 505 ஆம் குறள்.

13. சிவஞானசித்தியார், சுபக்கம் 99 ஆம் பாடல்.

14. பட்டினத்தார் பாடல், திருப்பாடற்றிரட்டு 2.

15. ''முத்திதனை அடைந்தோர் முந்துபழம் போதங்கி
வித்திகமாம் வீணை இவையிற்றின் – ஒத்த
இரதமணம் வெம்மை எழில் நாதம் போல
விரவுவ ரென் றோதும் விதி''
மணவாசங் கடந்தார் உண்மைவிளக்கம், 45 ஆம் பாடல்.

16. ''ஆதி மலம் இரண்டும் ஆதியாய் ஓதினால்
சேதியா மும்மலமுந் தீர்வாகா – போதம்
மதிப்பரிதாம் இன்பத்தே வாழலாம் மாறி
விதிப்படியோ தஞ்செழுத்துமே''
மனவாசங் கடந்தார் உண்மை விளக்கம், 43 ஆம் பாடல்.

17. ''மிக்கபோகம் விதியால் விளைத்திட்டு
எற்பணியாவாய் எனைப் பிரியாதே
ஓடி மீள்கென ஆடல் பார்த்திட்டு ..''
இருபா இருபது, 17 ஆம் பாடல்.

18. சிவஞான சித்தியார், சுபக்கம், 99 ஆம் பாடல்.

19. ''வினைப்பயனை வெல்வதற்கு வேத முதலாம்
அனைத்தாய நூலகத்தும் இல்லை ..'' என
நல்வழியில் ஔவையார் கூறுவதும் நோக்கத்தக்கது.

20. தாயுமானவர் பாடல்திரட்டு – ஆனந்தக் களிப்பு 27 ஆம் பாடல்.

21. பாரதியார், பாஞ்சாலி சபதம்.

22. நல்வழி, 15 ஆம் பாடல்.

23. தாயுமானவர் பாடல்திரட்டு, பொன்னை மாதர், 63 ஆம் பாடல்.

24. சிவஞான சித்தியார், சுபக்கம் 117 ஆம் பாடல்.

25. சீகாழிச் சிற்றம்பலநாடிகளின் துகளறு போதம், பாடல் 1.

26. சிவஞானசித்தியார் சுபக்கம், 181 ஆம் பாடல்.

27. காரைக்காலம்மையார், அற்புதத்திருவந்தாதி, பாடல் 17.

28. வானகத்தில் வானும் மணத்தில் மணமும் போ
லான சுகப் பேற்றி லழுந்தியது – தானாகு
மாண்ட குருநாதா வடியேன் பெருவாழ்வை
மீண்டு சொல வுண்டோ விதி
துகளறுபோதம் பாடல் 60.

29. ''சாற்றி லதற்கு வமை தாடலை போற் சன்மார்க்க
வேற்று விதி பலவும் வேண்டாவே ..''
துகளறுபோதம், 62 ஆம் பாடல்.

30. சிவஞானபோதம், அவையடக்கம்.

31. திருமூலர், திருமந்திரம், 81 ஆம் பாடல்.

32. சிவஞான சித்தியார், சுபக்கம், பாடல்.

33. புறநானூறு, 192 ஆம் பாடல்.